62


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 04 புதன்கிழமை (17~05~2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:148


## திருமலைப் பயணிகளை அழைத்துவர ஒரு வாரத்தில் விசேட கப்பல் சேவை

திருகோணமலையில் கடந்த பல வாரங்களாக நிர்க்கதியான நிலையில் உள்ள 4 ஆயிரம் பயணிகளை வடக்கே அனுப்புவதற்காக விசேடகப்பல் சேவை ஒன்றை இன்னும் ஒரு வாரத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திருமலை பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கே செல்லப் பதிவு செய்தவர்களை நான்கு சேவைகளில் அனுப்ப வசதியாக சரக்குக் கப்பல் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்படவிருப்பதாக பிரதேச செயலருக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது

'லங்கா முடித்த' கப்பலை இந்தச் சேவைக்கு பெறமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

வேறு ஒரு கப்பலையே இந்தச் சேவைக்கு அமர்த்தவிருப்பதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

# கைதடியில் கடுஞ்சமர்!

## தமது பாதுகாப்பு நிலைகளை படையினர் மாற்றியமைத்தனர்

யாழ்ப்பாணம்,மே17

**கைதடியை அண்மித்த பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**புலிகளின் தாக்குதல்கள் காரணமாக தமது பாதுகாப்பு நிலைகளைத் தாங்கள் மாற்றியமைத்துள்ளதாகப் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் இரவு முதல் கைதடியிலும், நாகர்கோயிலிலும் விடுதலைப் புலிகள் படையினர் மீது நடத்திய தாக்குதல்களைப் படையினர் பதில்தாக்குதல் நடத்தி முறியடித்து விட்டதாக 'ரூபவாஹினி' அறிவித்தது.

இது தொடர்பாக 'ரூபவாஹினி' மேலும் தெரிவித்ததாவது:-

தனங்களப்பில் படையினரின் பாதுகாப்பு நிலைகள் மீது பெருமளவு விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பெரும் தாக்குதலை நடத்தினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## 5 லட்சம் யாழ். மக்களின் நிலை அறிய விசேட ஆலோசனைக்குழு அமைக்குக!

### ஜனாதிபதியைச் சந்தித்து ரணில் வற்புறுத்து

கொழும்பு,மே17

யுத்தச் சூழலில் சிக்கியுள்ள ஐந்து லட்சம் யாழ். மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கென விசேட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியையும் பிரதமரையும் நேற்றுக் காலை அலரி மாளிகையில் சந்தித்து யாழ். நெருக்கடி நிலைமை குறித்துப் பேச்சு நடத்தியபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது வெடித்துள்ள யுத்தம் காரணமாக சுமார் ஐந்து லட்சம் தமிழ் மக்களும் 40 ஆயிரம் படையினரும் எவ்வாறான சூழ்நிலையில் இருக்கின்றனர் என்ற செய்தியை அறியமுடியாதுள்ளது.

எனவே யாழ். மக்களின் நிலைமை குறித்து ஆராய ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அத்துடன் படையினரின் நிலைமை குறித்து ஆராயவும் ஆலோசனைக்குழு அமைக்கப்பட

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்கிறார் கதிர்காமர்

கொழும்பு,மே17

இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை. இலங்கையில் தனி நாடு ஒன்று உருவாகுவதை இந்தியா ஒருபோதும் ஆதரிக்கவில்லை.

இவ்வாறு கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர்.

கொழும்பில் நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றிலேயே கதிர்காமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தனிநாடு ஒன்றை ஏற்படுத்த பிரபாகரன் காணும் கனவு நனவாக மாட்டாது.

தனிநாடு ஒன்றுக்கு இடமில்லை. இடமளிக்கப்படவும் மாட்டாது. பிரபாகரன் ஏற்படுத்தப் போவதாக நம்பியிருக்கும் தனிநாட்டை உலகில் எந்தவொரு நாடும் அங்கீகரிக்கப் போவதில்லை. யாழ்ப்பாணத்தில் படையினர் விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தி விட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இது ஒரு திருப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## போரை உடனடியாக நிறுத்த ஐரோப்பிய யூனியன் வலியுறுத்து

ஜெனீவா,மே17

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அதன் பின் இரு தரப்பும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளின் கூட்டமைப்பு நேற்று முன்தினம் அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்சமயம் இடம்பெறும் யுத்தத்தினால் வீணான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. உடைமைகள் நாசமாகின்றன.

அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை இரு தரப்பும் அனுமதிக்கக் கூடாது. அவர்களை பாதுகாக்க இரு தரப்பும் முன்வர வேண்டும்.

வீணான யுத்தத்தை நிறுத்தி, பேச்சுக்களை ஆரம்பிக்க இரு தரப்பும் முன்வரவேண்டும். என்று விண்ணப்பிக்கின்றோம்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஊரடங்கு நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மே17

தீவுப்பகுதி அடங்கலாக குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டுவரும் இரவுநேர ஊரடங்கு உத்தரவு இன்றுமுதல் இரு மணித்தியாலங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. என்று பலாலி பாதுகாப்புத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

இதுவரைகாலமும் இரவு 9.30 மணிமுதல் அதிகாலை 5மணிவரை அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு இன்றுமுதல் இரவு 7.00மணி முதல் காலை 5மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை -

யாழ்.மாநகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக அமுல் செய்யப்படும் ஊரடங்குச்சட்ட நேரத்தில் மாற்றம் எதுவும் இல்லை என்றும்-

இன்று முதல் யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் மட்டும் இந்த ஊரடங்கு காலை 9மணிக்கு நீக்கப்பட்டு மீண்டும் நண்பகல் 12.30 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## கைதடியில் ஷெல்லுக்கு மூன்று பேர் காயம்!

யாழ்ப்பாணம்,மே17

கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் மூவர் காயமடைந்தனர்.

கைதடி வடக்குப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் காயமடைந்த வைரமுத்து கிட்டினர் (வயது60) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடி தெற்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சுப்பிர மணியம் சின்னம்மா(வயது 53)என்பவரும் அவரது மகனான சுப்பிரமணியம் பவிலேந்திரன் (வயது19) என்பவரும் தமது வீட்டைப் பார்ப்பதற்காக நேற்றுக் காலை சென்றசமயம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தனர். இருவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் -

யாழ்.மானிப்பாய் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த நாகநாதன் நவேசுதன் (வயது 7), ஜெகமோகன் துஷ்யந்தன் (வயது 6) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-3-5-109)

### கொழும்பில் தாக்குதல் நடத்த வைத்திருந்த

## 120 கிலோ வெடிமருந்து வவுனியா பகுதியில் மீட்பு!

கொழும்பு,மே17

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதியிலும் குண்டுத் தாக்குதல்களை நடத்தவென மறைத்துவைக்கப்பட்டிருந்த 120 கிலோ நிறையுள்ள வெடிமருந்துப் பொருள்களை வவுனியா - நெலுக்குளம் பகுதியில் மீட்டுள்ளதாக பம்பலப்பிட்டிப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பொலீஸாரின் பாதுகாப்பில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்ஒருவர் கொடுத்த தகவலின்பேரில் நேற்று முன்தினம் வவுனியாவுக்குச் சென்ற விசேட பொலீஸ் குழு ஒன்றே இந்த வெடிமருந்துப் பொருள்களை மீட்டதாகவும் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பலர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

### ஏழு நாடுகளுடன் இதுவரை பேச்சு:

## கடன் அடிப்படையிலேயே ஆயுதங்கள் கொள்வனவு!

கொழும்பு,மே17

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்தவென ஏழு நாடுகளுடன் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக நாம் பேச்சு நடத்தியுள்ளோம். இதன் அடிப்படையில் சில நாடுகளில் இருந்து கடன் அடிப்படையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளோம்.

வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டன், பாகிஸ்தான் மற்றும் சீனா, உக்ரைன், இஸ்ரேல் உட்பட

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

நாவலர் பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் இடத்தைச் சேர்ந்த பெனிக்னா ரஜனி பிரான்சிஸ்பிள்ளை என்பவரது தே.அ.அட்டையும் (இல.655371923V), வி.அ.அட்டையும் 11.05.2000 அன்று யாழ்.ஆஸ்பத்திரிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாட்டு நிலைமையை மனதில் கொண்டு மேற்காணும் முகவரியில் அல்லது கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (76263)

198, சென்.பெனடிக்ற் றோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மீரா சிவபாக்கியத்தின் தேசியஅடையாள அட்டை(555282800V) மற்றும் மீரா அருள்நேசனின் விசேட அ.அட்டை, தொழில் அடையாள அட்டை என்பன 11.05.2000 அன்று கச்சேரி நல்லூர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாற்சதுர சுவிஷேச சபை, முத்திரைச் சந்தையடி, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (76157)

### புறொயிலர் கோழிகள்

புறொயிலர் கோழிகள், மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. எல்லா நாள்களிலும் (ஊரடங்கு நேரத்திலும்) பெற்றுக்கொள்ளலாம். கட்டணமின்றி சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: V.S., 227,பிறவுண் றோட் (கலட்டிச் சந்திக்கு 300 யார் யாழ்.நகர் பக்கம்), யாழ்ப்பாணம். (76102)

# சுகாதார அமைச்சின் அனுமதியின்றி ஆஸ்பத்திரி இடம்மாற்றப்படமாட்டாது

## பதில் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே17

சுகாதார அமைச்சின் அனுமதியின்றி யாழ்.போதனா வைத்தியசாலை வேறு இடத்துக்கு மாற்றப்படமாட்டாது என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சிவசுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்நகரப் பகுதியில் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் வைத்தியசாலையை பாதுகாப்பான இடத்துக்கு இடம்மாற்றம் செய்யவேண்டும் என்று கருத்து பலரின் மத்தியிலே நிலவி வருகிறது.

வைத்தியசாலையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக தினமும் சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்து வருகின்றோம்.

நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கும் வரை வைத்தியசாலை இயங்கிக்கொண்டேயிருக்கும்.

வைத்தியசாலை பிரதேசத்தினை பாதுகாப்பு வலயமாக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

யாழ்ப்பாண மக்களின் நன்மை கருதி போரில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரும் யாழ்.போதனா வைத்தியசாலைச் சுற்றாடலில் தாக்குதல்களை நடத்தமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

வைத்தியசாலைப் பிரதேசத்தைத் தாக்குதலற்ற பிரதேசமாகக் கணிக்கும் வகையிலே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிப்பின் பேரில் வைத்தியசாலை கூரை மற்றும் மதில்களில் செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதுடன் செஞ்சிலுவைக் கொடியும் வைத்தியசாலையில் பறக்கவிடப்பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார். (உ-5-9-4)

### தெற்கு டாக்டர்கள் திரும்பினர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய தென்னிலங்கை டாக்டர்களில் எஞ்சியிருந்த மூவரும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் தென்னிலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றனர். இவர்களுடன் வேறும் சில டாக்டர்கள் உட்பட மொத்தம் எட்டுப்பேர் நேற்றுக் கொழும்புக்குத் திரும்பினர்.

### உதவிப்பணக் கொடுப்பனவு

பருத்தித்துறைப் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் உதவிப்பணம் பெறுபவர்களின் கொடுப்பனவுக்கான பணிப்புரை சகல தபாலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனவே உதவிப்பணம் பெறுபவர்கள் உரிய தபாலகங்களில் கொடுப்பனவைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-109)

## மாட்டுத் திருடர்கள் மாட்டினர்

யாழ்ப்பாணம்,மே17

மேய்ச்சலுக்குச் சென்ற மாட்டை திருட்டுத்தனமாகப் பிடித்து இறைச்சிக்காக வெட்டியவர்கள் வகையாகப் பிடிபட்டனர்.

வெட்டிய இறைச்சியில் ஒரு பங்கு மாட்டின் உரிமையாளருக்கும் வழங்கப்பட்டதாம்.

தனது மாட்டின் இறைச்சியை உண்டபின் மறுநாள் தனது மாட்டைக் காணவில்லையென அவர் தேடி விசாரித்தபோதே தனது மாடு தான் பங்கு போடப்பட்டது என்பதை அவர் தெரிந்துகொண்டாராம்.

கரவெட்டி கிழக்கில் கடந்த மூன்று நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னையா என்பவரே மாட்டை இழந்தவராவார்.

வெட்டியவர்கள் திருட்டை ஒப்புக்கொண்டு அதற்குரிய பெறுமதியைச் செலுத்தி மன்னிப்புக் கேட்டதை அடுத்து ஊரவர்களால் எச்சரிக்கை செய்து விடப்பட்டனர். (உ-15)

## புலிகளை ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுங்கள்!

### சிங்களக் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு,மே17

விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டி, நாட்டைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சிங்களப் பேரினவாதக் கட்சிகள் அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

தற்போதைய யுத்த நிலைமை தொடர்பாக அரசியல் கட்சிகளுக்கு விளக்கும் வகையில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் பேசிய பூமிபுத்ர, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளின் பிரதிநிதிகளே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன பேசுகையில், புலிகளை ஒழிப்பதற்கு சகலகட்சிகளும் இணைந்து உறுதி பூணவேண்டும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக சகல கட்சிகளும் கூட இணைந்து தீர்மானம் எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரினார்.

சிங்கள பூமிபுத்ர கட்சித் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க பேசுகையில் -

"தமிழ்ப் பயங்கரவாதத்தை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடு தழுவிய வகையில் இந்தப் பயங்கரவாதம் வியாபித்துள்ளது" - என்றார் அவர். (உ-3-7)

## சண்டிலிப்பாயில் தங்கியுள்ள 719 குடும்பங்களுக்கு நிவாரணம்

### பதிவு வேலைகள் ஆரம்பம்

நவாலி,மே17

யாழ்ப்பாணம் மற்றும் பல இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் 719 குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தமக்குரிய உலர் உணவு நிவாரணத்தை தாம் தங்கியிருக்கும் இடங்களில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர்களின் சிபார்சுடன் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் அந்தோனியார் ஆலயம், மானிப்பாய் செண். ஆன்ஸ் பாடசாலை, கட்டுடை சைவப்பிரகாச வித்தியாசாலை, ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர்கோயில், நவாலி அரசடி ம.வி. ஆகிய இடங்களிலும் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் 719 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 368 பேர் ஏற்கனவே தஞ்சமடைந்திருந்தனர்.

இவர்களுடன் நேற்று குருநகர், நாவாந்துறை, யாழ்நகர், கொட்டடிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களும் இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள் தொடர்பான பதிவுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. (ஐ-5-100)

### குருநகரில் நேற்றுமுன்தினம்

## ஷெல்லினால் காயமுற்ற மற்றொருவரும் மரணம்

யாழ்ப்பாணம்,மே17

குருநகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் விழுந்த ஷெல்லினால் படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை 2 மணிக்கு அங்கு மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த ஜெயசீலன் றெமிஸியஸ்(வயது14) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவருடன் சேர்த்து இச்சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது. (உ-15)

### வாராந்த நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே17

இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் இவ்வார நிகழ்வுகள் இன்று புதன்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இன்று காலை தொண்டமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் வைகாசி விசாகத் திருவிழா நடைபெறவுள்ளது. காலை 10 மணிக்கு 'பெருமான் முருகன் பிறவான் இறைவான்' எனும் ஆன்மீக உரையும் இடம்பெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் காலை 9.15 மணிக்கு 'ஸ்ரீமத் பகவத்கீதை தந்த பக்திநெறி' எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (உ-10)

### தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,மே17

நேற்று காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 97 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடநாட்டில் இருந்து 70 தபாற் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். பிரதம தபாலகத்தில் நேற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பணிகள் இடம்பெற்றன. குறிப்பிட்டஅளவில் ஓய்வூதிய வவுச்சர்களும் வழங்கப்பட்டன. ஊழியர்களின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது.(உ-10)

### நோயாளிகள் சென்றனர்

யாழ்ப்பாணம்,மே17

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் திருகோணமலைக்கு அழைத்துச் செல்வதற்கென ஒரு தொகுதி நோயாளர்கள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து காங்கேசன் துறைத் துறைமுகத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். (ஐ-5)

### யாழ். பல்கலை ஊழியர் சங்க உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம்,மே17

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கச் செயற்குழு உறுப்பினர்களை இன்று காலை 10 மணிக்குப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு ஊழியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

யுத்தச் சூழ்நிலையில் பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு அவசர உதவிகள் வழங்குவது குறித்து முக்கிய முடிவுகள் இன்று எடுக்கப்படவுள்ளதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

### மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம்,மே17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

உதவிப பணம் பெறுபவர்கள் தபாலகங்களில் நாளை தமக்குரிய உதவிப் பணத்தினை பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-100)

### வீடுகள் அமைப்பு

நெல்லியடி,மே17

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் தங்கியுள்ள நூறு குடும்பங்களுக்கு குடியிருப்புக்களை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முனை, கற்கோவளம், துன்னாலை ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன. (உ-3-109)

### வங்கிகள் இயங்கின

யாழ்ப்பாணம்,மே17

நேற்றுப் பகல் ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது யாழ்.நகரிலே உள்ள வங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கின.

வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

இதனால் நகரிலுள்ள வங்கிகளின் முன்பாகப் பெருமளவு வாடிக்கையாளர்கள் கூடியிருந்தனர். (உ-5)

### நலன்புரிச் சங்க உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம்,மே17

மக்கள் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த முதலுதவிப் படையணி உறுப்பினர்களையும், பாடசாலைகளில் முதலுதவிப் பயிற்சி பெற்ற தொண்டர்களையும் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை மற்றும் நாமகள் வித்தியாலயம், இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உள்ள முதலுதவிப் பிரிவு அலுவலகங்களுக்கு உடன் சமூகமளிக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ-7)


## இடம்மாற்றம்

### எரிக் கனேஸ் மூக்குக்கண்ணாடியகம்

தற்போது கீழ்க் காணும் முகவரியில் இயங்கி வருகின்றது

குறிப்பு :- எம்மிடம் புதிய ஓடர் தந்தவர்கள் இம்முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**எரிக்கனேஸ்**

பொன்னையா லேன், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

(76154)


## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை சிவஞானம்

(முன்னாள் தோட்ட உத்தியோகத்தர், வறக்காமுறை எஸ்ரேட், மாத்தளை, ஓவலை எஸ்ரேட், கைகாவலை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிவஞானம் அவர்கள் 08.05.2000 திங்கட்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் இன்பராணி, புஸ்பராணி, சிவச்சந்திரன், ஜெயராணி, யோகராணி, சிவபாலன், சிவகரன், சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குருநாதபிள்ளை, நல்லைநாதன், சிவகலா, யோகநாதன், சேகர், லதா, சிவானந்தி, சிவரூபி ஆகியோரது அன்பு மாமனாரும் தயாளன், இந்துமதி (டோட்டி), யோகேந்திரன், சுரேந்திரன், குலேந்திரன், மயூரிக்கா, தமிக்கா, டிலக்சி, டினேஸ், டிலானி, ருசான், ருபேஸ், வைஸ்ணவி, கோபிகிஸ்ணா, விஸ்ணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் டோனால்ட்டின் அன்புப் பூட்டனும் பொன்னுத்துரை அவர்களின் சகோதரனும் பங்கயவல்லி, குமாரலிங்கம், சதாசிவம், ஆகியோரது அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனத்தை மயானத்தில் இன்று (17.05.2000) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ராணிவாசம்'*
*நாவற்குழி, கைதடி.*

தகவல்:
**சி.சற்குருநாதபிள்ளை**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
(மருமகன்)

*தற்போதைய முகவரி:-*
மே/பா: த.இராசரத்தினம்
பரராசசேகரப்பிள்ளையார் கோயில் முன்வாசல்
இணுவில் தெற்கு, சுன்னாகம். (76155)

### கந்தையா கிருஷ்ணர்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியடியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணர் நேற்றுமுன்தினம் (15.05.2000) திங்கட்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் புருஷோத்தமன் (கண்ணன்), பிரதிஷ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.05.2000) செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மின்தறி நிலையம்,*
*தெல்லிப்பழை கிழக்கு.* (76156)

தகவல்:
**கி.புருஷோத்தமன்**
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை உடன் நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு,மே17

தற்சமயம் இடம்பெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

யுத்த நிலைமை தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் விளக்கம் அளிப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளே இந்தக் கோரிக்கையை முன்வைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி, ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா ஆகியோரே இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

"தற்போதைக்குப் பேச்சுக்கே இடமில்லை" என்று ஜனாதிபதி இவர்களுக்குப் பதில் அளித்தாராம். (இ-3-7)

# யாழ்.ப.நோ.கூ.ச. கிளைகளில் நிவாரணப் பொருள் விநியோகம்

அரியாலை,மே17

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இடம்பெயர்ந்த கிளைகளை தவிர ஏனைய கிளைகளில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் வேளைகளில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

இடம்பெயராத கிளைகளுக்கு மக்கள் சென்று பொருள்களை பெற்றுக்கொள்ளலாம் என்று சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதேசமயம் தற்போது இடம்பெயர்ந்துள்ள கிளைகளில் இதுவரைகாலமும் நிவாரணத்தைப் பெற்றுவந்த பொதுமக்கள் தங்களின் நிவாரணத்தை கைலாசபிள்ளையார் கோயிலுக்குப் பின்னால் அமைந்திருக்கும் சங்கத்தின் களஞ்சியத்தில் வைத்துப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் சங்கத்தின் விசேட விற்பனை நிலையமும் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் திறக்கப்பட்டு அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்கு விநியோகித்து வருகிறது. (உ-17)

# தீவுப்பகுதிக்கு இடம்பெயர்ந்த மாணவருக்கு தற்காலிக ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே17

யாழ்.நகரப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தீவுப்பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் அங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கு அவர் விடுத்த அறிவுறுத்தலில் இடம்பெயர்ந்த மாணவர்களிடம் இருந்த விண்ணப்பப் பத்திரம் ஒன்றைப் பெற்றுத் தற்காலிக அனுமதி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## திணைக்கள தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே17

குடாநாட்டின் அத்தியாவசிய சேவை தொடர்பாக ஆராய்வதற்கு திணைக்களங்களின் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல திணைக்களத் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே17

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை புனித. அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து முக்கிய சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# உயிரிழந்த 5 புலிகளின் விவரம்

வவுனியா,மே17

தாம் மேற்கொள்ளும் 'ஓயாத அலைகள் -3' நடவடிக்கையில் தமது தரப்பில் உயிரிழந்த மேலும் 5 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவை வருமாறு:-

லெப்.கேணல் வசந் அல்லது உமாரமண்(கந்தசாமி சிவசுப்பிரமணியம் - கிளிநொச்சி), இளந்தெழிலன்(வெள்ளைச்சாமி முத்துக்குமார் - கிளிநொச்சி), பரணீதரன் (நடராஜா பார்த்தீபன்- யாழ்ப்பாணம்), புலவன்(அரியநாயகம் குணசீலன் - திருகோணமலை), ஈழவாசன்(கதிரமலைப்பிள்ளை அருள்வண்ணன் - யாழ்ப்பாணம்). (இ-7-9)

# கொழும்புத் தமிழரின் அச்சத்தை நீக்குவதற்குக் கலந்துரையாடல்

## தமிழ் அமைப்புக்கள் ஏற்பாடு

கொழும்பு,மே17

யாழ்.குடாநாட்டில் தீவிரமடைந்துவரும் யுத்த நிலையால் கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை நீக்கவும் அவர்களின் பாதுகாப்பு, முன்னேற்பாடுகள் குறித்து ஆராயவும் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு நகரில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள தமிழ் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சமய சந்நிதிகளில்

மானிப்பாய்,மே17

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய தேர் உற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. நாளை காலை 10.00 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெறும். (இ-3-90-139)

* * *

யாழ்ப்பாணம்,மே17

வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காமம் சுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் தீர்த்தத் திருவிழாவுடன் இன்று பூர்த்தியாகிறது. தேர்த்திருவிழா நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது. தீர்த்தத் திருவிழாவை ஒட்டி இன்று அன்னதானமும் வழங்கப்படும் (அ)

# வலிகாமம் அலுவலகங்களுக்கு ஊழியர்களின் வரவு குறைவு

வலி.வடக்கு,மே17

யாழ்.மாநகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசெயலக எல்லைகளுக்குள் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து வலிகாமம் பகுதிகளில் உள்ள அலுவலகங்களுக்கு அரச ஊழியர்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

நல்லூர் பிரதேச செயலகம் மாநகரசபை எல்லைக்கு வெளியில் உள்ளபோதிலும் கூட அந்த அலுவலகம்கூட சரிவர இயங்குவதில்லை.

இதேபோன்று தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலகங்களிலும் இத்தகைய நிலையே காணப்படுகின்றது. (உ-86)

# மூலஸ்தானத்திலிருந்து நகையை திருடியவர் வசமாகச் சிக்கினார்

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

வலி.கிழக்கு,மே17

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் விக்கிரகத்தினுள் இருந்த ஒன்பது தங்கப் பவுண் நகையினை திருடியவர் பிடிபட்டார்.

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரி ஆலயத்தினுள் கடந்த 10ஆம் திகதி பகல் வேளை புகுந்த நபர் அங்கு அம்மனின் விக்கிரகத்தில் போடப்பட்ட ஒன்பது பவுண் நகையை திருடிச் சென்றுள்ளார்.

பின்னர் ஆலயக்குருக்கள், ஆலயத்துக்கு வந்து சென்ற நபர் மீது சந்தேகங்கொண்டு துரிதமாக நடவடிக்கை எடுத்த சமயம் அந்த சந்தேக நபர் இந்த நகையை நகைக் கடை ஒன்றில் விற்பனை செய்துள்ளார் என்பது தெரியவந்ததும் -

பின்னர் பொலீஸாரின் உதவியுடன் சந்தேக நபரிடம் இருந்து நகைகள் மீட்கப்பட்டன.

இதேவேளை இந்த ஆலயக் குருக்களின் வீட்டிலும் பல மாதங்களுக்கு முன்னர் தொலைக் காட்சிப்பெட்டியும் ஐம்பதாயிரம் ரூபா பணமும் இவர் திருடியதாகவும் இப்பணமும் இவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-180)

## பங்கீட்டுஅட்டைக்கு விநியோகம்

சங்கானை,மே17

சங்கானை ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் ஒரு நிவாரண அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெயும் அங்கத்தவர் ஒருவருக்கு 1கிலோ மாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

மா பெறுவதில் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட இப்பகுதி மக்களும் பெரும்சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதோடு பாணுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-29)

## கதிர்காமரைக் கொலை செய்ய முயற்சியாம்

கொழும்பு,மே17

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் தகவலைச் சேகரித்ததாக தமிழ்ப்பெண் ஒருவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் தனேஷ் மங்களா என்ற பெண் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (இ-3-9)

# கோட்ட மட்டத்திலான தமிழ்தினப் போட்டிகள்

## மாத இறுதிக்குள் நடத்தப்படும்

கொழும்பு,மே17

பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் தமிழ் மொழித்தின விழாப் போட்டிகளில் கோட்ட மட்டத்திலான போட்டிகள் அனைத்தும் இந்த மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படவேண்டும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

கோட்ட மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய ரீதியிலான போட்டியில் தெரிவாகும் மாணவர்களுக்கு இந்த வருடம் தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது என்று அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-4)

# மாவடிச்சந்தியில் சனி இரவு 2 கடைகள் உடைத்துத் திருட்டு

வலி.கிழக்கு,மே17

இரவுவேளை இனந்தெரியாதவர்களினால் இரு கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் உள்ள இரு பலசரக்குக் கடைகளிலேயே இப்பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. திருடர்கள் முன்பக்கக் கதவினை உடைத்து ஒரு கடையில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் மற்றைய கடையில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் -

இரவுவேளை மக்கள் நடமாட்டம் இல்லாத நேரம் கட்டைப்பிராயில் கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன.

முன் கதவுகளை உடைத்து உள் சென்ற திருடன் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்களை எடுத்துச் சென்றுள்ளான். (இ-180)

# விற்பனைத் திகதி முடிவுற்ற பிஸ்கட், சோயாமீற் அழிப்பு

சங்கானை,மே17

சங்கானை, தொட்டிலடிப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனையில் ஈடுபட்ட சுகாதாரப் பரிசோதகர்கள், விற்பனைத்திகதி முடிவுற்ற பிஸ்கட் வகைகள், சோயாமீற் பைக்கெட்டுகள் ஆகியவற்றைக் கைப்பற்றி அவற்றை அழித்தனர். வர்த்தக நிலைய உரிமையாளர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இந்த திடீர் சோதனையை சங்கானை, சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ். இராசதுரை, வீ.ரதீசன் ஆகியோர் மேற்கொண்டனர். (இ-29)


ஓம்
கண்ணன் துணை

## திருமண திருமுகம்

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் வைகாசி மாதம் 05 ஆம் நாள் (18.05.2000) வியாழக்கிழமை பகல் 01-03 மணி முதல் 01-48 மணி வரையுள்ள விசாக நட்சத்திரமும் சித்தயோகமும் சிங்க லக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறைசெல்வன்
நமணதாஸ்
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
சுவந்தினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் ஹவலக் வீதி, வெள்ளவத்தை மயூரபதி அம்மன் தேவஸ்தான சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புதமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி அழகேஸ்வரன் தம்பதியினர்,
திரு. திருமதி முகுந்தாஸ் தம்பதியினர் (சகோ),
திரு. குணளதாஸ் (சகோ),
A3/9, அன்ரசன் தொடர்மாடி. பாக் வீதி,
நாரஹேன்பிட்டி, கொழும்பு-05.
416, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி கந்தையா தம்பதியினர்
திரு. கவிதாஸ் (சகோ)
வட்டு. தெற்கு
வட்டுக்கோட்டை.

(இரு வீட்டார் அழைப்பு)

(C/12121)



## அறிவித்தல்

முதலியார் ஒழுங்கையில் வசிக்கும் திரு.ஞானம் (சாரதி, இ.போ.ச. - தற்போது சைக்கிள்கடை உரிமையாளர்) அவர்களின் தாயார் தற்பொழுது இ.மி.ச யாழ்.பணிமனை டிப்போவில் இருக்கிறார். உடனடியாக அவரை வந்து பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தகவல்:
மகேந்திரம் (இ.மி.ச)
(குலம்)

(76262)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



தாயின் மடியில்

19 - 03 - 1967

தாயக மண்ணில்

15 - 05 - 2000

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)இன் மூத்த உறுப்பினரும் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உறுப்பினரும் சமாதான நீதிவானுமாகிய

## தோழர் சந்தனம் காண்டீபன் (கஜன்)

(பாலையூற்று, திருகோணமலை)

மக்களின் சேவைக்காய் உன்னை அர்ப்பணித்த அன்பனே!
மக்களின் மைந்தா கஜனே!!
சகோதரப் படுகொலையில் சுகம்காணும்
குருதி வெறியர்களின் கொலைக்கரங்கள் -உன்
குரல்வளையை நசித்ததுவோ?
இரக்கமற்ற ஈனர்களின் துவக்குகள் - உன்
இதயத்தைத் துளைத்ததுவோ?
அல்லலுறும் மக்களின் அவலங்களைப் போக்கிட
அல்லும் பகலும் அயராது உழைத்த எங்கள் தோழனே!
பண்பலை வீசிய உன் பார்வையின் விழிகளை அழித்த
கண்கெட்ட கயவரின் கடமைதான் என்ன?

மக்களின் சேவகன் மக்களின் பணியில்
மக்களுக்காய் மடிந்தாய் - நீ
சிந்திய குருதி உன் தியாகத்தை எழுதும்
தோழனே உன் மரணம் வாழ்வின் முடிவல்ல;
விதையாய் வீழ்ந்தாய்; விருட்சமாவோம்!
தொடர்வோம் உன் பாதச்சுவட்டின் வழியே
விரைவோம் எம் மக்களின் விடுதலைக்காய்

எம் இனியவனுக்கு இதய அஞ்சலி! இதய அஞ்சலி!! இதய அஞ்சலி!!!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈபி.டி.பி.),
யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஏமாற்றம் தந்த கூட்டம்

கடந்த திங்களன்று நடைபெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டம் யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

யாழ்ப்பாணப் போர் நிலைமையை நாட்டின் அரசியல் கட்சிகளுக்கு விளக்குவதற்காக ஜனாதிபதி இந்தக் கூட்டத்தை நடத்தினார். யாழ்ப்பாணத்துக்கான போர் அல்லது யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றுவதற்கான போர் மக்களுக்குப் பெரும் அழிவைக் கொண்டு வரும் என்பது வெள்ளிடைமலையாக உள்ளது. ஆகையால் இந்தப் போரை தற்காலிகமாகத் தணிக்கவேனும் திங்கட்கிழமை நடைபெற்ற கூட் டம் உதவும் என்றே யாழ்ப்பாண மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

இந்தப் போரில் சிக்குண்டு தமது உயிர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்று தெரியாமல் யாழ்ப்பாண மக்கள் பதகளித்துக்கொண்டிருக்கிறார்கள். தமதுநிலையை உணர்ந்து அரசியல் கட்சித் தலைவர்கள் போரைத் தற்காலிகமாகத் தணிக்கவேனும் ஆலோசனை கூறுவார்கள்; அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்கள்; சாதகமான முடிவு எடுப்பார்கள் என்று ஆவலோடும் ஆர்வத்தோடும் எதிர்பார்த்தார்கள். ஆனால் கூட்டத்தில் அவர்கள் எதிர்பார்த்தவகையிலான முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சாதாரண வேளையில் நடைபெறும் அரசியல் கட்சிகளின் கூட்டம் போன்றே திங்களன்று நடைபெற்ற கூட்டமும் முடிவுற்றது. யாழ்ப்பாண மக்களின் உயிராபத்தான நிலையையும் அவர்களின் உணர்வுகளையும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எவரும் மனதார உணரவில்லை என்பதனையே இந்தக் கூட்டத்தின் நிகழ்வுகள், முடிவுகள் வெளிப்படுத்தின.

இலங்கை இன விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்திருப்பதால் அது விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று அரசியல் கட்சிகள் அழுத் தம் கொடுத்தால், அது சம்பந்தமாக ஆக்கபூர்வமாக ஏதாவது நடைபெற்றால், தற்காலிக போர் நிறுத்தம் செய்வதற்கான சூழ்நிலையேனும் உருவாகும்; அத்தகைய ஒரு நிலையாவது இந்தக் கூட்டத்தின் மூலம் உண்டாகக் கூடாதா என்று யாழ்ப்பாணத்து மக்கள் ஏங்கினார்கள்.

இவ்வாறு பல வகைகளாலும், பல எதிர்பார்ப்புகளாலும் நிறைவேறாத நிலையில் பெரும் ஏமாற்றத்துடன் யாழ்ப்பாணத்து மக்கள் விரக்தியடைந்த நிலையில் உள்ளனர். தங்களுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை உணரும் நிலையில் எந்த அரசியல் கட்சிகளும் தலைவர்களும் இல்லையே என்று வேதனைப்படுகிறார்கள்.

இந்த இக்கட்டான வேளையில்கூடத் தம்மைப் பாதுகாக்கவோ, பாதுகாப்பதற்கு உதவுவதற்கோ, அதற்குக் குரல் கொடுப்பதற்கோ தானும் எவரும் இல்லையே என்ற எண்ணத்தில் மனம் ஒடிந்துபோயுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் போரில் சிக்குண்டவர்களின் ஆபத்தான், அவலமான நிலையை இங்குள்ள யாழ்.ஆயரும், நல்லை ஆதீன முதல்வரும் உணர்ந்த அளவுக்கு, அரசியல் தலைவர்களால் உணரமுடியவில்லையே என்ற மனப்புழுக்கம் அவர்கள் மத்தியில் நிலவுகிறது. இவர்களை மனிதர்கள் எவரும் காப்பாற்றமாட்டார்களா?

இனிமேல் எவரையும் நம்ப முடியாது; தத்தமது தெய்வங்கள் மட்டுமே தங்களைக் காப்பாற்றும் என்ற கடைசி நிலைக்கு யாழ்ப்பாண மக்கள் வந்துள்ளார்கள் என்பதே இன்றைய நிலை.

---

### சியராலியோனில்

# ஐ.நா.படையினரில் 139 பேரை தீவிரவாதிகள் விடுதலை செய்தனர்

பிரீரவுன்,மே17

சியராலியோனில் தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஐ.நா. ஊழியர்களில் 139 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு வாரங்களாக அங்கு நிலவி வரும் சிக்கல் நிலை தீர்வதற்கு இது நல்ல அறிகுறியாகும் என்று ஐ.நா.அதிகாரி டேவிற் லிப்பஸ் கூறியுள்ளார்.

விடுவிக்கப்பட்ட ஊழியர்களில் 15 அதிகாரிகள். அண்டை நாடான லைபீரியாவின் தலைநகர் மாண்ரோவியாவிலும் மற்றவர்கள் எல்லை நகரான கோயாவிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் இவர்கள் சியராலியோனின் தலைநகர் பிரீரவுனுக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட 18 ஐ.நா.சமாதானப் படை வீரர்களைத் தீவிரவாதிகள் ஏற்கனவே விடுதலை செய்திருந்ததும் -

அவர்கள் அனைவரும் கைலாகும் என்ற நகரில் உள்ள சமாதானப் படைமுகாமை சென்றடைந்துவிட்டனர் என்பதும் - குறிப்பிடத்தக்கது.

சியராலியோனில் ஐ.நா. சமாதான நடவடிக்கையை ஏற்கமறுத்து புரட்சிகர ஐக்கிய முன்னணித் தீவிரவாதிகள் சமாதானப் படையினர் உட்பட 500க்கும் மேற்பட்ட ஐ.நா. ஊழியர்களை சிறைப்பிடித்தனர் என்பது தெரிந்ததே.

(உ-ஒ-9)

# தொழிலாளர் போராட்டத்தால் ஊட்டியில் பெரும் பதற்றநிலை

நீலகிரி,மே17

தமிழகத்தின் ஊட்டிப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தினால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பசும் தேயிலைக்கு 15ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று கோரி தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்.

ஊர்வலத்தின் முடிவில் மாவட்ட ஆணையாளரிடம் மனுக்கொடுத்த பின் சாலை மறியலில் அவர்கள் ஈடுபட்டனர்.

அவர்களைக் கலைக்கப் பொலீஸார் தடியடி நடத்தியதைத் தொடர்ந்து அரசுப் பேருந்துகள் உட்பட பல வாகனங்கள் சேதப் படுத்தப்பட்டன.

இதனையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையினால் ஊட்டி மலர்க் கண்காட்சி உட்பட அனைத்து அரசு விழாக்களும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

(உ-ஒ-9)

# கிழக்குக் கீழ்வானில் ஓர் அதிசயக்காட்சி!

லண்டன்,மே17

இன்று அதிகாலை கிழக்குத் திசையின் கீழ் வானத்தில் அதிசயக் காட்சியாக 5 கிரகங்களும், சூரியன் மற்றும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் தோன்றும் என்று இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

மேற்படி சங்கத்தின் அறிவியல் பிரசாரக்குழுத் தலைவர் எஸ்.பேராசிரியன் வானத்தில் நிகழும் இந்த அபூர்வக்காட்சி குறித்து தகவல் தருகையில் - அதிகாலையில் சூரியோதயத்துக்கு சற்று நேரம் முன்பாக கிழக்குத்திசையில் அடிவானத்தை ஒட்டிய பகுதியில் இந்த அற்புதக் காட்சி தோன்றும்.

சனி, வியாழன், செவ்வாய், வெள்ளி, புதன் ஆகிய கிரகங்களுடன் சூரியனும் சந்திரனும் ஏறத்தாழ ஒரே நேர்கோட்டில் காணப்படும்.

அந்தச் சமயத்தில் வானில் தீப்பிழம்புக் குவியல் ஒன்று எரிவதைப்போல் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-ஒ-9)

### மேற்குக் கரையிலும் காஸாவிலும்

# இஸ்ரேலியப் படையினருடன் பலஸ்தீன பொலீஸ் மோதல்

## மூவர் பலி; 270 பேர் காயம்!

காஸா,மே17

இஸ்ரேலியப் படையினருக்கும், பாலஸ்தீனியப் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட கடும்மோதலையடுத்து வெடித்த வன்முறையில் 3பலஸ்தீனியர்கள் இறந்தனர். சுமார் 270 பலஸ்தீனியர்கள் காயமடைந்தனர்.

கடந்த நான்கு வருடங்களில் அங்கு நிகழ்ந்த மிக மோசமான வன்முறை இதுவாகும் என்று கூறப்படுகிறது

இஸ்ரேல் நாடு உருவான போது அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த பலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டனர். இந்த நிகழ்வின் 52ஆவது ஆண்டு தினத்தைக் குறிக்கும் வகையில் மேற்குக்கரையிலும், காஸாவிலும் பலஸ்தீனியர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்.

இந்த ஊர்வலத்தின்போதே வன்முறை வெடித்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இஸ்ரேல் பலஸ்தீனம் இடையே சமாதான முயற்சிகள் தீவிரமடைந்து வரும்போது இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவது அதைக் குழப்பும் எனக் கூறப்படுகிறது.

(உ-ஒ-9)

## விமானசேவை மீண்டும் ஆரம்பம்

புதுடில்லி,மே17

நேபாளத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே நிறுத்திவைக்கப்பட்டிருந்த விமானசேவையை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக இந்தியன் எயர்லைன்ஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து ஐந்து மாதங்களுக்கு முன்பு இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டதை அடுத்து இந்த விமானசேவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ-ஒ-9)

## 'திரிசூல்'ஏவுகணை பரீட்சார்த்த முயற்சி வெற்றி

திருவனந்தபுரம்,மே17

தரையிலிருந்து விண்ணில் பாய்ந்து தாக்கக்கூடிய 'திரிசூல்' ஏவுகணை இந்தியாவின் கொச்சிக் கடற்படைத்தளத்தில் உள்ள ஐ.என்.எஸ். துரோணாச்சாரியார் என்ற போர்க்கப்பலில் இருந்து ஏவிப் பரிசோதிக்கப்பட்டது. இச்சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் [illegible] னையை நேரடியாகப் பார்வையிட்டார்.

(உ-ஒ)

---

## ஈரானில் தேர்தல் மோசடி

தெஹ்ரான்,மே17

ஈரானில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தலைநகர் தெஹ்ரானில் வாக்குப் பதிவில் மோசடி நடந்துள்ளதாக எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனைக் காரணம்காட்டி அங்கு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஈரானில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தெஹ்ரான் உட்பட பெரும்பாலான இடங்களில் அதிபர் மொகமட் கதாமியின் ஆதரவு பெற்ற சீர்திருத்தவாதிகள் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ-9)

## நிலஅதிர்வு

புதுடில்லி,மே17

பாகிஸ்தானின் வடபகுதியிலும் மற்றும் ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளிலும் கடந்தவாரம் கடும் நில அதிர்வுகள் ஏற்பட்டன.

(இ-9)

### உலக அரங்கில்

# பங்களாதேஷ் பிரதமரை கொலை செய்ய முயற்சி

## தொழிலதிபர் மீது குற்றப்பத்திரிகை

டாக்கா,மே17

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனாவைக் கொல்லச் சதி செய்ததாக தொழிலதிபர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஷொயிப் சௌத்ரி என்ற அந்தத் தொழிலதிபர் மீது எட்டுமாத கால விசாரணையின் பின் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சதித்திட்டத்துக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு கணனிகள் உட்பட் 12 பொருள்களை புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். இந்த வழக்கில் 12 பேர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி மேற்படி தொழிலதிபர் உள்ளூர் பத்திரிகைக்கு பிரதமர், அமைச்சர்கள் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட முப்பது பேரைக் கொன்றால் பெருந்தொகைப்பணம் கிடைக்கும் என்று மின்னஞ்சல் மூலம் செய்தி அனுப்பியிருந்ததாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ-9)

### 'லவ்பக்' வைரஸ்

# தனக்குச் சம்பந்தம் இல்லையென பிலிப்பீன்ஸ் இளைஞர் தெரிவிப்பு

மணிலா,மே17

உலகெங்கும் உள்ள கணனிகளில் 'லவ்பக்' என்ற வைரஸுகளை பரப்பியதுக்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என பிலிப்பீன்ஸில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இளைஞர் மைக்கல் புவன் தெரிவித்தார்.

இந்த இளைஞர் தனது சட்டத்தரணி ஊடாக விடுத்த அறிக்கையில் 'லவ்பக்' என்ற வைரஸை தான் உருவாக்கவோ, அறிமுகப்படுத்தவோ இல்லை என்றும் -தனது பெயரை இந்தக் குற்றச்செயலுடன் தொடர்புபடுத்திப் பத்திரிகைகளில் குறிப்பிட்டிருந்தமையைப் பார்த்தவுடன் தான் அதிர்ச்சி அடைந்ததாகவும் -

தெரிவித்தார்.

லவ்பக் வைரஸ் அமெரிக்க இராணுவத் தலைமையகம், பிரிட்டிஷ் நாடாளுமன்றம் உட்படப் பல நாடுகளின் முக்கிய மையங்களில் கணனிகளின் பாதிப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

(இ-8-4)

# எரித்திரியாவில் கடும் வரட்சி

லண்டன்,மே17

எரித்திரியாவில் கடும் வரட்சி நிலவுவதாகவும், இந்த நிலைமை மேலும் தொடரும் அறிகுறிகள் தென்படுவதாகவும் அங்கு சென்று திரும்பிய செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடக்கு எரித்திரியாவில் அன்ஸ்வா பிரதேசமே வரட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் இலைகள் வேர்கள்,கிழங்குகள் என்பவற்றை உண்ணும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும்-

அன்ஸாவாப் பிரதேசத்தில் வாழும் சுமார் மூன்று லட்சம் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும் எனவும் - செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வின் பிரதிநிதி ஜக்கொப்ஸன் தெரிவித்தார்.

(இ-8-4)

# ஈராக் மீதான தடையை நீக்குவதற்குக் கோரிக்கை

ஈராக்குக்கு எதிராக ஐ.நா.சபையினால் கடந்த 10 ஆண்டுகளாக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையைத் தளர்த்தவேண்டும் என்று ஜோர்தான் பிரதமர் கோரியுள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த பத்துவருடகாலப் பொருளாதாரத் தடையை ஐ.நா.தளர்த்துவதுடன், சர்வதேச நடவடிக்கைகளில் ஈராக் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் அளிக்கவேண்டும்.

ஈராக்கின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் எந்தவொரு வெளிநாடும் தலையீடு செய்வதை ஜோர்தான் எதிர்க்கின்றது என்றார்.

# போதைவஸ்து கடத்தியவருக்கு சவூதியில் மரணதண்டனை

றியாட்,மே17

சவூதிஅரேபியாவுக்குள் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானிய பிரஜை ஒருவருக்கு நேற்றுமுன்தினம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

சவூதியின் தலைநகர் றியாட்டில் இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதாக சவூதி உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை -

சவூதிஅரேபியாவில் இதுவரை பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்த ஆண்டில் 37 பேரும்-

கடந்தவருடம் மொத்தம் 99 பேரும் -

மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு உடனடியாகச் சாத்தியமில்லை

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே17

இலங்கைஇனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணும் சாத்தியம் இல்லை என்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் தோப் ஜோன் ஜக்லண்ட் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நோர்வே அரசு இலங்கையில் 17 வருடகாலமாக இடம்பெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிவதற்காக தனது ஆலோசகராக எரிக் சொலமனை நியமித்தது. எனினும் இந்தப் பணியை நிறைவேற்ற எரிக் சொலமனுக்கு வழங்கப்பட்ட ஆறு மாத காலம் போதுமானது அல்ல என்பது இப்போது தெளிவாகியுள்ளது என்று நோர்வே அமைச்சர் ஜக்லண்ட் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தப் பணியை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-9-4)

# ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி கதிர்காமரைச் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,மே17

யாழ்ப்பாண நிலைமை தொடர்பாக ஐரோப்பிய யூனியன் நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி உசிற்றாலோ இன்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

யாழ். மாநகர வைத்திய அதிகாரிடாக்டர் இ.தெய்வேந்திரன் தொலைபேசி மூலம் உசிற்றாலோவுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடிய சமயமே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஏற்கனவே இது விடயமாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் -

மக்களின் பாதுகாப்பு விடயத்தில் அக்கறை காட்டுமாறு அவர்களிடம் தாம் கோரியுள்ளதாகவும்-

உசிற்றாலோ மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,மே17

நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளை யாழ். நகரின் கரையோரப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து சென்றதைக் காணமுடிந்தது. (ஐ-5)

# ரணிலின் பி.பி.சி. பேட்டியை மறுஒலிபரப்புச் செய்க!

## ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு,மே17

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டி குறித்து எழுப்பப்பட்டுள்ள சர்ச்சையை அடுத்து அந்தப் பேட்டியை பி.பி.ஸியில் மறு ஒலிபரப்புச் செய்ய ஏற்பாடு செய்யுமாறு ஐ.தே.க. குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்தனர்.

அலரிமாளிகையில் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே ஐ.தே. க. குழுவினர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

உண்மையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் அப்பேட்டியை பி.பி. ஸியில் மீண்டும் முழுமையாக ஒலிபரப்புவதற்கும் -

பத்திரிகைகள் மூலம் அதனைப் பிரசுரிப்பதற்கும் -

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.தே.க. குழுவினர் கோரினர்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 13 ஆம் திகதி பி.பி.ஸி. உலக சேவைக்குப் பேட்டியளித்திருந்தார்.

இந்தப் பேட்டியில் ரணில் தெரிவித்த சில கருத்துக்களை அடுத்து புலிகளின் உத்தியோக பூர்வ பேச்சாளராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதாக தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார். இதனையடுத்து இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. (ஐ-9)

# பல்கலைக்கழக செயற்பாடு; பேரவை நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே17

சூழ்நிலைக்கு ஏற்ப யாழ். பல்கலைக்கழகம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு துணைவேந்தருக்கு அதிகாரம் வழங்குவது என்று பல்கலைக் கழகப் பேரவை நேற்றுக் கூடி முடிவு செய்தது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தற்போதைய நெருக்கடி நிலையில் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டன.

தற்போதுள்ள சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான முடிவுகளையும்-

மாணவர்களுக்கான உணவு மற்றும் இருப்பிட வசதிகள் குறித்த ஏற்பாடுகளையும் -

மேற்கொள்ளும் அதிகாரத்தைத் துணைவேந்தருக்கு வழங்குவதென பேரவை முடிவுசெய்துள்ளது.

மாணவிகளுக்கு மருதனார் மடத்திலும் -

மாணவர்களுக்கு வட்டுக்கோட்டையிலும் -

விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுப்பது என்றும் பேரவை முடிவு செய்தது. (ஐ-3)

### யாழ். படையினர் மற்றும்

# 5 லட்சம் மக்களுக்காக ஐ.தே.க. பிரார்த்தனை

கொழும்பு,மே17

யாழ்.குடாநாட்டில் உள்ளஐந்து லட்சம் மக்களினதும 40 ஆயிரம் படையினரதும் நலனுக்காக விசேட பிரார்த்தனைகளை நடத்த ஐ.தே. கட்சி ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரார்த்தனை வைபவங்கள் நாளை மறுதினம் கண்டி ஸ்ரீதலதா மாளிகையிலும் மறுநாள் அனுராதபுரம் ஜெயசிறீ மகாபோதியிலும் நடைபெறவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இதே வேளை எதிர்வரும் ஞாயிறன்று சகல பௌத்த, இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஐ.நா.தூதரக உபஅலுவலகம் பண்டத்தரிப்பில் திறப்பு

யாழ்ப்பாணம்,மே17

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக பண்டத்தரிப்பில் உப-அலுவலகம் ஒன்றை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நேற்றுத் திறந்து வைத்துள்ளது.

யாழ். நகரில் இயங்கும் அலுவலகம் எக்காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது என்றும் -

அது தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதி தலைமையகத்தால் வழங்கப்பட்டிருப்பதாகவும்-

அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலிகாமம் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ள மக்களின் நிலைமை குறித்து நேரில் அறியவும், அவர்களுக்கு உதவவும் பண்டத்தரிப்பில் உபஅலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயரும் மக்கள் தொடர்பான விவரங்களை தமது அமைப்பு சேகரித்து வருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## தமிழ்த்தினப் போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே17

சங்கானைக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த தமிழ்த்தினப் போட்டிகள் திகதி குறிப்பிடப் படாது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா அறிவித்துள்ளார்.

## கைதடியில்...

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமான இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலைவரை நீடித்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பல தாக்குதல்களை படையினர் முறியடித்தனர்.

பூநகரியில் இருந்து விடுதலைப் புலிகள் ஒரே சமயத்தில் பீரங்கி, மோட்டார் தாக்குதல்களை நடத்தினர். படையினரும் பீரங்கி, மோட்டார் தாக்குதலை நடத்திப் பதிலடி கொடுத்தனர்.

புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் காரணமாக சிரேஷ்ட தரைப்படைத்தள கர்த்தாக்கள், ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நிலைகளை வடகிழக்குத் திசைகளுக்கு இடம்மாற்றினர்.

நேற்றுக் காலை நடந்த இந்தச் சண்டை காரணமாக ஓர் அதிகாரியும் ஐந்து சிப்பாய்களும் உயிரிழந்தனர். ஐந்து அதிகாரிகளும் 36 சிப்பாய்களும் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து புலிகளின் வானொலி எதனையும் குறிப்பிடவில்லை.

- என்று 'ரூபவாஹினி' தெரிவித்தது.

சாவகச்சேரிப் பக்கத்திலிருந்து நேற்றிரவும் அகோர ஷெல் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. (உ-7)

## கடன் அடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏழு நாடுகளுடனேயே ஆயுதங் கொள்வனவு தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சகல நடவடிக்கைகள் குறித்தும் இந்தியாவுக்கு நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அறிவிப்போம்; அறிவித்தும் வந்துள்ளோம்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார் (ஐ-7)

## 5 லட்சம் யாழ்....

வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் ஆலோசனைக் குழுவின் தலைவருக்கு யாழ். மக்களின் நிலை குறித்து பாதுகாப்புச் சபைக்கு எடுத்துக் கூறும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐ.தே.கவின் தவிசாளர் கரு ஜெயசூரிய, செயலாளர் காமினி அத்துக்கோறள ஆகியோரும் ஜனாதிபதியைச் சந்தித்தனர். (உ-7-9)

## இந்தியாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனை. அரசாங்கமும் படையினரும் மிகுந்த உற்சாகத்துடன் எதிரியுடன் போராடுகின்றனர். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருந்த 1980 களின் முற்பகுதியில் இருந்த நிலையை விட இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்டது. இலங்கை இறைமையுள்ள நாடு என்ற வகையில் வெளிநாடுகளில் இருந்து எந்த நேரத்திலும் உதவிகோர முடியும்.

இலங்கை ஆயுதங்களை உற்பத்தி செய்யவில்லை. அதனால் வேறு நாடுகளில் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்கிறது. ஆயுதங்கள் கோரி அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு வெளிநாடுகள் சாதகமான பதிலைத் தந்துள்ளன.

இலங்கையின் வடபகுதியைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதை இந்தியா ஆதரிக்கவில்லை.

ஏனைய நாடுகளைப் போன்று இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்படுவதையே இந்தியாவும் விரும்புகின்றது. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். இந்த வகையில் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்துவிட்டனர்.

புலிகளுக்கு என்ன செய்தியை விடுக்கப் போகின்றீர்கள் என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு -

விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் தமிழ் மக்களே கஷ்டம் அனுபவிக்கின்றார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகாண்பதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

இந்த நிலைமையில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு அழிவையே ஏற்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்கள் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை ஆதரிக்கவில்லை. இதற்கான தமது நிலைப்பாட்டை அவர்கள் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-7)


## முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகளுக்கு தந்த பொருள்களை உரியவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

**சரவணா எலக்ரோனிக்**

இல.2, சேர்.பொன். இராமநாதன் வீதி, நாச்சிமார்கோவிலடி.

(C/12122) - சண் அண்ணன்

## முக்கிய அறிவித்தல்

**கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ்**

37, மணிக்கூட்டு வீதி

எம்மிடம் திருத்த ஒப்படைத்த பொருள்களை ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் விரைந்து பெற்றுக் கொள்ளவும்

(C/12124) - உரிமையாளர்.


## நெஞ்சத்தை விட்டகலாத 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அரவணைப்பில் 22 - 12 - 1975



அநியாய அழிப்பில் 21 - 05 - 1997

### செல்வி சைமினி தர்மலிங்கம்

சைமினி...!
என்னதானோ நினைத்துக்கொண்டாய்,
இத்தனை ஆண்டுகள் எமை
பிரிந்து வாழ உன்னால் எப்படித்தான் முடிந்தது?
வஞ்சகர் வாழுகின்ற மண்மீதில் - உன்
பாதங்கள் பட்டுவிடலாகா தென்றோ
இன்னமும் எம்மருகில் நீ வரவில்லை?
கலைமகள் உனைத் தத்தெடுத்தாள்,அரவணைத்தாள்....
அதைக் கண்டுதானே என்னவோ
பாவிகள் உனை வஞ்சம் தீர்த்தார்
எம் விழிகள் தொடும் புள்ளிகள் யாவிலும்
உன் ரூபம் காண்பதான பிரம்மை எமக்கு
வேதனையில் வாடுகின்ற எமக்கொரு
ஆறுதல் தருவதற்கென்றாலும்
எம் உறவுகளில் ஒன்றாய் மீண்டும்
நீ வந்து உதித்தால் என்ன?

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி

(C/12123) - குடும்பத்தினர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org